RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 30 | பிப்ரவரி.6 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்த கூட்டறிக்கை 5 நாட்களில் வெளியாகலாம்: பியூஷ் கோயல்

புதுடெல்லி: பிப்.6-

இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் அடுத்த 45 நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலுக்கும் (நிசிசி) இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான விதிமுறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரு தரப்பு பேச்சுவார்த்தைக் குழு தலைவர்கள் இன்று கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பியூஷ் கோயல் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், ''இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கை தயாராக உள்ளது. அது இன்னும் 45 நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டப்பூர்வமான இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் மார்ச் மாத மத்தியில் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டறிக்கை வெளியான பிறகு, இந்திய பொருட்களுக்கான இறக்குமதி வரியை 18% ஆக குறைப்பதற்கான அரசாணையை அமெரிக்க அரசு பிறப்பிக்கும்'' என தெரிவித்துள்ளார்.



முன்னதாக, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதற்கும், அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் அளவுக்கு பொருட்களை கொள்முதல் செய்யவும் பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

வெள்ளை மாளிகையில் செவ்வாய் கிழமை (பிப். 3) செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க பத்திரிகைச் செயலாளர் கரோலின் லெவிட், ''அதிபர் டொனால்டு ட்ரம்ப், இந்திய பிரதமர் மோடியுடன் சிறப்பான ஒரு தொலைபேசி உரையாடலை நடத்தினார். அதன்மூலம், இந்தியாவுடன் சிறந்த வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் மோடியுடன் அவர் நேடியாகப் பேசினார். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் நல்ல உறவை கொண்டிருக்கிறார்கள். அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடியுடனான உறவை மிகவும் விரும்புகிறார், பிரதமர் மோடி மீதும் இந்தியா மீதும் மிகுந்த மரியாதை வைத்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல், அமெரிக்காவிடம் இருந்தும், வெனிசுலாவிடமிருந்தும் கூட எண்ணெய் வாங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இது அமெரிக்காவுக்கும் அமெரிக்க மக்களுக்கும் நேரடி பலன்களைத் தரும். வெனிசுலாவின் வர்த்தகத்தையும், அதன் எண்ணெய் விற்பனையையும் அதிபர் ட்ரம்ப்பும் அவரது தேசிய பாதுகாப்புக் குழுவும் நேரடியாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

எரிசக்தி, போக்குவரத்து, விவசாயப் பொருட்கள் ஆகியவற்றை 500 பில்லியன் டாலர் அளவுக்கு அமெரிக்காவிடம் இருந்து கொள்முதல் செய்ய மோடி உறுதி அளித்துள்ளார்.

இந்தியா மீதான அமெரிக்க வரி 18% ஆக இருக்கும். அதேநேரத்தில், அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு இந்தியாவில் பூஜ்ஜிய வரி விதிக்கப்படும். எனவே இது ஒரு சிறந்த ஒப்பந்தம். அமெரிக்க தொழிலாளர்கள், வணிகங்கள், நுகர்வோர் அனைவருக்கும் இது ஒரு பெரிய வெற்றி'' என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "திமுகவின் காட்டாட்சி விரட்டப்படும்" அஜித்குமார் விவகாரத்தில் நயினார் நாகேந்திரன் கருத்து

சென்னை, பிப்.6-

"சிவகங்கை வரை சென்ற முதல்வர் ஸ்டாலின், தமது ஏவல்துறையின் மூர்க்கத்தனத்தால் அடித்துக் கொல்லப்பட்ட அஜித்குமாரின் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் சொல்லாதது ஏன்?. ஏழை எளிய மக்களை பலிகொடுக்கும் திமுகவின் காட்டாட்சி விரட்டியடிக்கப்படும்'' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இரத்தம் தோய்ந்த கரங்களுடன் இந்தத் தேர்தலைச் சந்திக்கப் போகும் திமுக. கடந்த ஆண்டு ஜூன் மாதம் தமிழகத்தையே உலுக்கிய சிவகங்கை மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமாரின் மரணம், காவல் மரணம் எனவும், அஜித்குமார் மீது நிகிதா அளித்த புகாரில் உண்மையில்லை எனவும் சென்னை உயர் நீதிமன்ற அமர்வில் சிபிஐ இன்று அறிக்கை தாக்கல் செய்துள்ளது.



ஒன்றுமே இல்லாத வழக்கில் அப்பாவி ஒருவரைக் காவலர்கள் அநியாயமாக அடித்துக் கொலை செய்துவிட்டனர் என நீதிபதிகள் காட்டம் தெரிவித்துள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடப்பது மனிதநேயமற்ற கொடுங்கோல் ஆட்சி என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

பாலியல் வன்கொடுமை குறித்து புகாரளிக்க வரும் பெண்களிடம் தனிப்பட்ட முறையில் துருவித் துருவி விசாரித்து அவர்களை தர்மசங்கடத்திற்கு ஆளாக்கும் திமுகவின் ஏவல்துறை, அஜித்குமார் மீதான புகாருக்கு மட்டும் அதிரடி காட்டியதன் காரணம் என்ன?

புகாரின் பின்னணியையும் உண்மைத் தன்மையையும் முழுதாக ஆராயாமல் கையில் கிடைத்த அப்பாவியைக் கம்பால் அடித்தே கொலை செய்யுமளவிற்குக் காவலர்களின் இதயம் மரத்துப் போய்விட்டதா? மூளை மழுங்கிவிட்டதா? அல்லது மேலிடத்திலிருந்து அத்தனை அழுத்தம் கொடுக்கப்பட்டதா?

சிவகங்கை வரை சென்ற முதல்வர் ஸ்டாலின், தமது ஏவல்துறையின் மூர்க்கத்தனத்தால் அடித்துக் கொல்லப்பட்ட அஜித்குமாரின் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் சொல்லாதது ஏன்? உள்ளிட்ட பல கேள்விகள் மக்கள் மனதை அரித்துக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்திற்குமான விடைகள் வரும் சட்டமன்றத் தேர்தலின் முடிவுகளில் கிடைக்கும். ஏழை எளிய மக்களை பலிகொடுக்கும் திமுகவின் காட்டாட்சி விரட்டியடிக்கப்படும்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பார்த்திபனூரில் நகை திருட்டு வழக்கு: குற்றவாளி கைது, நகைகள் மீட்பு

பார்த்திபனூர் பிப்.06

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி உட்கோட்டத்திற்குட்பட்ட பார்த்திபனூர் காவல் நிலைய சரகத்தில், 30.01.2026 அன்று செந்தில்குமார் என்பவரின் வீட்டை உடைத்து சுமார் 14 பவுன் தங்க நகைகள் திருடப்பட்டதாக புகார் பெறப்பட்டது.

இந்த புகாரின் அடிப்படையில், பரமக்குடி உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜெபராஜ் உத்தரவின்பேரில், பார்த்திபனூர் காவல் நிலைய ஆய்வாளர் கமல் மேற்பார்வையில்



தனிப்படை அமைக்கப்பட்டது.

சார்பு ஆய்வாளர் சுந்தர் மற்றும் தலைமை காவலர்கள் ராஜா, ராஜேஷ் ஆகியோர் மேற்கொண்ட தீவிர விசாரணையின் மூலம், ராமநாதபுரம் பாரதி நகரைச் சேர்ந்த சித்திக் மகன் அஷ்ரப் அலி என்பவர் கைது செய்யப்பட்டார்.

குற்றவாளியிடமிருந்து திருடப்பட்ட தங்க நகைகள் மீட்கப்பட்டு, நீதிமன்ற உத்தரவின்படி அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

## டாஸ்மாக் பணியாளர்கள் கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி பிப்.11ல் அதிமுக பேரணி

சென்னை, பிப்.6-

டாஸ்மாக் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைளை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டு வைத்திருக்கும் திமுக ஸ்டாலின் மாடல் அரசையும், பணியாளர்கள் நலன் கருதி அவர்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், பிப்.11ல் அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பில் பேரணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்: "நிர்வாகத் திறனற்ற முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு; மக்களின் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாதது; பெண்களுக்கு பாதுகாப்பின்மை; கொலை, கொள்ளை, வழிப்பறி என பல்வேறு அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்று வருவது தொடர்கதையாகி விட்டது. முதல்வர் ஸ்டாலின் இவை எதையும் கண்டுகொள்ளாமல் மெத்தனப் போக்கோடு இருந்து வருவது கண்டனத்திற்கு உரிய விஷயமாகும்.

அந்த வகையில், டாஸ்மாக் நிறுவனத்தில் தமிழகம் முழுவதும் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் ஊழியர்களின் முக்கிய கோரிக்கைகளான, பணி நிரந்தரம் செய்வது, போதுமான ஊழியர்கள் நியமனம் செய்யப்படாதது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டு வைத்திருக்கும் திமுக அரசையும், டாஸ்மாக் நிர்வாகத்தையும் கண்டித்தும்; பணியாளர்கள் நலன் கருதி அவர்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அதிமுக அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் சார்பில் பிப்.11ம் தேதி (புதன் கிழமை) காலை 10 மணியளவில் பேரணி நடைபெறும்.

முன்னாள் அமைச்சர் தங்கமணி, தலைமையில், அண்ணா தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர் ஆர். கமலக்கண்ணன் முன்னிலையில், சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் இருந்து எழும்பூர் டாஸ்மாக் தலைமை அலுவலகம் வரை பேரணியாகச் சென்று கண்டனக் குரல் எழுப்பி, நிர்வாக அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்படும்.

மேலும், அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் சார்பில் நடைபெற உள்ள இந்தப் பேரணியில், டாஸ்மாக் அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும், அண்ணா தொழிற்சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் பல்வேறு இணைப்புச் சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகளும், உறுப்பினர்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.'' என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

## குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் நிறைவேற்றம்

புதுடெல்லி, பிப்.6.-

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

மக்களவை வழக்கம்போல் இன்று காலை 11 மணிக்கு கூடியது. அவை கூடியது முதல், ஓய்வுபெற்ற ராணுவத் தளபதியின் 'நினைவுக் குறிப்புகளில்' இருந்து ராகுல் காந்தி மேற்கோள் காட்டி பேச அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதற்கு சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதி மறுத்தார்.

மேலும், அவை கூடிய இரண்டு நிமிடங்களில் அவையை பகல் 12 மணிக்கு ஒத்திவைத்தார். 12 மணிக்கு அவை கூடியபோது மீண்டும் எதிர்க்கட்சி எம்பிக்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி எம்பிக்களின்



கோரிக்கையை ஏற்க சபாநாயகர் மறுத்துவிட்டார்.

எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே, பிரதமரின் உரை இல்லாமல், குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை மக்களவை நிறைவேற்றியது. குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான எதிர்க்கட்சிகளின் திருத்தங்களை சபாநாயகர் ஓம் பிர்லா வாக்கெடுப்புக்குவிட்டார். அவை நிராகரிக்கப்பட்டன.

பின்னர், ஜனவரி 28ம் தேதி நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை சபாநாயகர் வாசித்தார். எதிர்க்கட்சி எம்பிக்களின் எதிர்ப்பு முழக்கங்களுக்கு மத்தியில் அந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, மக்களவை பிற்பகல் 2 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், ''நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேசவும் விவாதத்தை தொடங்கவும் உரிமை உண்டு. அது இந்த அவையில் முற்றிலும் மறுக்கப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் பேச அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் ஒரே கோரிக்கை'' என கூறினார்.

இது தொடர்பாகப் பேசிய பாஜக தேசிய பொதுச் செயலாளர் அருண் சிங், ''காங்கிரஸ் கட்சியின் அடிப்படை அணுகுமுறை எதிர்மறை எண்ணங்களால் நிரம்பியுள்ளது. அவர்கள் மீண்டும் மீண்டும் நாடாளுமன்ற அமர்வுகளை சீர்குலைக்கிறார்கள். இல்லாத விஷயங்களில் இருந்து பிரச்சினைகளை உருவாக்க முயல்கிறார்கள். இது நாட்டு மக்களுக்குத் தெரியும். அதனால்தான், அவர்கள் காங்கிரஸ் கட்சியை மீண்டும் மீண்டும் நிராகரிக்கிறார்கள். ஆனாலும் காங்கிரஸ் கட்சி அதை இன்னும் உணரவில்லை'' என விமர்சித்தார்.




■ புதுக்கோட்டை மாவட்டம் என் ஊர் என் கனவு திட்டம் இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்டம் தயாரிப்பதற்கான மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் கூட்டத்தை துவக்கி வைத்து விழா பேருரை மாண்புமிகு திரு எஸ் ரகுபதி இயற்கை கனிம வளத்துறை அமைச்சர்கள் மாண்புமிகு திரு சிவ.வீ.மெயநாதன் பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர்கள் மாவட்ட கலெக்டர் மு அருணா இஆப அவர்கள் மாவட்ட வருவாய் திரு ராஜராஜன் அவர்கள் மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திரு வை முத்துராஜா எம்எல்ஏ அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுமக்களிடம் என் ஊர் என் கனவு திட்டத்தின் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் தொழிற்சாலைகள் அமைத்தல் விவசாயிகள் ஊக்குவித்து பல்வேறு கோரிக்கைகளை பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநில தலைவர் டாக்டர் டைமன் ராஜா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சைக்கிள் பேரணி

தாம்பரம், ஜன.06-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநில தலைவர் டாக்டர் டைமன் ராஜா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்டத்தில் இருந்து பெரம்பூர் வரை பிரமாண்டமான சைக்கிள் பேரணி நடைபெற்றது.

இந்த பேரணி கரூர் மாவட்ட தலைவர் கண்ணன் தலைமையில் தொடங்கப்பட்டு, வணிகர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

பேரணி தாம்பரம் வந்தடைந்தபோது, தாம்பரம் வணிகர் சங்கம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு தாம்பரம் சங்கத்தின் தலைவர் மார்கெட் ஞானபால் தலைமையேற்றார்.

பொருளாளர் ஆல்வின் ராபின்சன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில், துணை தலைவர் கோதண்டன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக செங்கல்பட்டு மாவட்ட தலைவர் இம்மானுவேல் ஜெயசீலன் மற்றும் மாவட்ட செயலாளர் உமாபதி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

டாக்டர் டைமன் ராஜாவின் பிறந்த நாளை ஒற்றுமை, உற்சாகம் மற்றும் சமூக விழிப்புணர்வுடன் வணிகர்கள் கொண்டாடிய இந்த சைக்கிள் பேரணி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. அப்போது சட்ட ஆலோசகர் நாகராஜ், இணை செயலாளர் கவின்குமார், செயற்க்குழு உறுப்பினர் பின்னி ஜெபர்சன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## முறையான உரிமம் இல்லாத டிரோன் கேமராக்கள் பறிமுதல் செய்யப்படும்: டி.எஸ்.பி. ஜெபராஜ் எச்சரிக்கை

பரமக்குடி, பிப்.06-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஜெபராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியதாவது: பரமக்குடி தாலுகாவில் டிரோன் கேமராக்களை வைத்திருப்பவர்கள், இந்திய விமான போக்குவரத்து ஆணையம் வழங்கிய உரிய உரிமம் பெற்றிருப்பது கட்டாயமாகும். உரிமம் பெற்றவர்கள், அந்த உரிமத்தின் எண், காலாவதி தேதி உள்ளிட்ட முழு விவரங்களை பரமக்குடி



தாலுகா அலுவலகத்தில் பதிவு செய்து, தகவல் பரிமாற்றம் செய்யும் வகையில் பரமக்குடி காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அவசியம் ஒப்படைக்க வேண்டும். உரிமம் காலாவதியானவர்கள் உடனடியாக அதை புதுப்பித்து பதிவு செய்ய வேண்டும்.

சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், முறையான உரிமம் இல்லாமல் டிரோன் கேமராக்கள் பயன்படுத்தப்படுவது கண்டறி யப்பட்டால், அவை சட்டவிரோதமானவை எனக் கருதி உடனடியாக பறிமுதல் செய்யப்படும் பொதுமக்கள் மற்றும் ட்ரோன் கேமராக்கள் வைத்திருப்பவர்கள் காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பரமக்குடி உட்கோட்ட துணைகாவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்



■ ஒத்தக்கடை வேளாண்மைக் கல்லூரி சார்பில் இறுதியாண்டு வேளாண்மை மாணவி அ. பாலதர்ஷினி, நிலக்கோட்டை வட்டார ஒருதட்டு கிராமத்தில் விவசாயிகளுக்கு சூரிய ஒளிப் பொறி (Solar Light Trap) பயன்பாடு குறித்து செயல்விளக்கம் அளித்தார். இந்தப் பொறி மூலம் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு, ரசாயன மருந்து பயன்பாடு குறைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

# திப்பனூர் கிராமத்தில் ரூ.19.50 லட்சத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி - மதியழகன் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, பிப்.06-

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள புளியம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட திப்பனூர் மற்றும் செங்கிநாயன்பட்டி கிராமங்களில், குடிநீர் தேவையை நிரந்தரமாக தீர்க்கும் வகையில் ரூ.19.50 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணிக்கான பூமிபூஜை விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி தலைமை வகித்தார். கவுன்சிலர் அம்மன்ராஜா, முன்னாள் ஊராட்சி தலைவர் சசிகலா அர்ஜுனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்எல்ஏ சிறப்பு அழைப்பாளராக



கலந்து கொண்டு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணிகளை பூமிபூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் அஞ்சூர் நாகராஜ், பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சரவணன், பிடிஏ தலைவர் சிவசங்கர், தருமன், சீனிவாசன், கஜேந்திரன், மஞ்சமேடு சக்திவேல் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்படுவதன் மூலம் திப்பனூர் மற்றும் செங்கி நாயன்பட்டி கிராம மக்களுக்கு போதிய குடிநீர் வசதி ஏற்படுத்தப்படுவதுடன், கோடை காலங்களில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாடு முழுமையாக தீர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, புளியம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் சார்பில் விலையில்லா சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியிலும் மதியழகன் எம்எல்ஏ கலந்து கொண்டு மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர்,

“கிராமப்புற மற்றும் நகரப்புற மாணவர்கள் பள்ளிக்கு எளிதாகவும், பாதுகாப்பாகவும் சென்று வருவதற்கு விலையில்லா சைக்கிள் திட்டம் பெரிதும் உதவுகிறது. கல்வியே மாணவர்களின் எதிர்காலத்தை மாற்றும் மிகப்பெரிய சக்தி. அதனால் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாகவும், தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது,” என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தனர்.



## பதட்டமான வாக்குச்சாவடிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

தேனி, பிப்.06-

தேனி மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, தேனி மாவட்ட காவல்துறை Election Cell சார்பில், பதட்டமான (Vulnerable) வாக்குச்சாவடிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று நடத்தப்பட்டது.

மேற்படி கூட்டத்திற்கு, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா தலைமையில், தேர்தல் காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுதல், பாதிப்பு உள்ள வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள், தேர்தல் விதிமுறைகள் முறையாக அமல்படுத்தப்படுதல் ஆகியவை குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், தேர்தல் காலத்தில் ஏற்படக்கூடிய அசாதாரண நிலைகளைக் கட்டுப்படுத்துதல், பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் சூழலை உருவாக்குதல் தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தேனி மாவட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவல் ஆளினர்கள் கலந்து கொண்டனர்.



## பம்மல் கிளையில் மாற்றுத்திறனாளிக்கான சமத்துவ பொங்கல்

பம்மல், பிப்.06-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மல் பகுதியில் 11/01/2026 அன்று ஞாயிற்றுக்கிழமை பம்மல் கிளையில் மாற்றுத்திறனாளிக்கான சமத்துவ பொங்கல் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இனிப்பு பொங்கல் வைத்து, நல திட்ட உதவி உபகரணங்கள் வழங்குதல், விளையாட்டுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டவர்கள் பம்மல் பாலு, காங்கிரஸ், அன்னை லதா ரூட் லேம்ப் டிரஸ்ட், குமரன் பம்மல் சரசு கல்யாண மண்டபம் உரிமையாளர், பிரவீன் நிறுவினர் செந்தமிழ் அறக்கட்டளை பம்மல், சசிகலா சமூக ஆர்வலர், பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் செல்வி பி.கவிதா, தலைவர் கலா, கௌரவத் தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் தேவி, மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ். தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் .நிஷாந்த் கிருஷ்ணா. முன்னிலையில் மக்கள் குறைத்தீர்க்கும் முகாம் மாநகராட்சி அலுவலகத்தில் நடைப்பெற்றது. உடன் மாநகராட்சி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். முகாமில் மக்களுடைய கோரிக்கை மனுக்கள் வாங்கப்பட்டது, துறைச்சார் அதிகாரிகளிடம் கடந்த காலத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகளிடம் கேட்டறிந்து கால தாமதமின்றி மக்கள் கோரிக்கைகள் நிறைவேற்றபட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய அவசர செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்

காஞ்சிபுரம், பிப்.06-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய அவசர செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய செயலாளர் அண்ணன் எம்டி.லோகநாதன் அவர்களின் தலைமையிலும் ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜே.வி.எஸ். ரங்கநாதன், குணா, ஏ.ஜே. ஆறுமுகம், பி.ராஜேந்திரன், ஆர்.டி.ஸ்ரீகாந்த், ஏ.கருணாகரன், மா.வே.பொன்னுசாமி, இ.பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் இந்த நிகழ்ச்சியில் காட்டாங் குளத்தூர் ஒன்றிய குழு தலைவர்



உதயா கருணாகரன், காட்டாங்குளத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் ஏ.வி.எம்.இளங்கோவன், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.கார்த்திக், இளைஞர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் இளைஞரணி மாணவரணி மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணையின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஊராட்சி கிளை கழக செயலாளர் BLA2 BDA BLC நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இராணிப்பேட்டை நகராட்சி, வாரச்சந்தை மைதானத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.11.52 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தினசரி நாளங்காடியினை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செ.தனலிங்கம் அவர்கள் தினசரி நாளங்காடியில் குத்து விளக்கேற்றினார். உடன் நகரமன்ற தலைவர் திருமதி.சுஜாதா வினோத், துணைத் தலைவர் திரு.ரமேஷ் கர்ணா, நகராட்சி ஆணையாளர் திரு.பாலமுருகன், நகராட்சி பொறியாளர் திரு.பரமுராசு மற்றும் பலர் உள்ளனர்.



# காவேரிப்பட்டணத்தில் மாற்றுக் கட்சியினர் 50க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, பிப்.06-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் (அதிமுக) தங்களை இணைத்துக் கொண்டனர்.

ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி, மத்தூர் தெற்கு ஒன்றியம் ஒன்றிய செயலாளர் நரேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த இணைப்பு நிகழ்ச்சி, அதிமுக துணை பொதுச் செயலாளரும், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பின ருமான கே.பி. முனுசாமி அவர்களின் முன்னி லையில் நடைபெற்றது. அவர் புதிதாக இணைந்தவர்களுக்கு கட்சியின் அடையாளமான சால்வை அணிவித்து வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமார், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் தமிழ் செல்வம், மாவட்ட பொருளாளர் சுந்தரவடிவேலு, எம்ஜிஆர் இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் ராஜேஷ் குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நடராஜன், இளம்பெண்கள் பாசறை ஒன்றிய செயலாளர் சிலம்பரசன், மாவட்ட துணை செயலாளர் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர் மற்றும் நகர செயலாளர் ஆறுமுகம், மாவட்ட மருத்துவர் அணி மருத்துவர் இளையராஜா, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன் உள்ளிட்ட பல்வேறு நிலை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் பேசிய தலைவர்கள், மறைந்த முதல்வர் புரட்சித்தலைவி அம்மா ஜெயலலிதா அவர்களின் மக்கள் நல திட்டங்களும், தற்போதைய அரசியல் சூழலில் அதிமுகவே தமிழக மக்களின் நம்பிக்கைக்குரிய இயக்கமாக இருப்பதாலும், கட்சியின் மீது மக்கள் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவித்தனர்.

இந்த இணைப்பு நிகழ்ச்சியின் மூலம் காவேரிப்பட்டணம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அதிமுகவின் கட்டமைப்பு மேலும் வலுப்பெறும் என கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# சிங்காரப்பேட்டை புளியானூர் ஏரிக்கு கடப்பரை ஆற்றுநீர் திருப்பும் திட்டம் - ரூ.98.01 லட்சம் மதிப்பில் தடுப்பணை, கால்வாய் பணிகளை அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்



கிருஷ்ணகிரி, பிப்.06-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட சிங்காரப்பேட்டை ஊராட்சி புளியானூர் பொதுப்பணித்துறை ஏரிக்கு, கடப்பரை ஆற்றுநீரை திருப்பி விடும் வகையில் கனிமங்கள் மற்றும் குவாரிகள் திட்ட நிதியின் மூலம் ரூ.98.010 லட்சம் மதிப்பில் தடுப்பணை கட்டுதல் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் 04.02.2026 அன்று துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் இ.ஆ.ப., பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தே. மதியழகன், திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலர் திரு.மகேந்திரன் இ.வ.ப. ஆகியோர் முன்னிலையில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் பேசுகையில்:

திருப்பத்தூர் மாவட்ட ஜவ்வாது மலைத் தொடரின் தெற்குப் பகுதியில் உருவாகும் கடப்பரை ஆறு, திருப்பத்தூர் மாவட்டத்தில் 5.20 கி.மீ. மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 8.60 கி.மீ. பாய்ந்து தென்பெண்ணை ஆற்றுடன் இணைகிறது. தற்போது இந்த ஆற்றின் நீர் சிங்காரப்பேட்டையில் உள்ள தீர்த்தகிரி வலசை பொதுப்பணித்துறை ஏரிக்கு மட்டுமே நீர்வரத்து அளித்து, அதன் உபரிநீர் நேரடியாக தென்பெண்ணை ஆற்றில் கலக்கி வருகிறது.

1976 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புளியானூர் பொதுப்பணித்துறை ஏரி, போதிய நீர்ப்பிடிப்பு பரப்பு மற்றும் நிலையான நீர்வரத்து இல்லாத காரணத்தால் இதுவரை ஐந்து முறைகள் மட்டுமே நிரம்பியுள்ளது. இதனால் பாசனப் பயன் முழுமையாக கிடைக்காத நிலை நீடித்து வந்தது. இதனை மாற்றும் நோக்கில், கடப்பரை ஆற்றிலிருந்து தடுப்பணை மற்றும் கால்வாய் அமைத்து புளியானூர் ஏரிக்கு நீரைத் திருப்பி விட இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

2021 தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதாக அறிவித்திருந்ததுடன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தே.மதியழகன் அவர்கள் சட்டமன்ற கூட்டத்தொ டர்களில் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் வனத்துறை, வருவாய்துறை, நீர்வளத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் இணைந்து கள ஆய்வு மேற் கொண்டனர். இதற்காக அகமது பாஷா என்பவரிடமிருந்து 20 சென்ட் நிலம் தானமாக பெறப்பட்டு, திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ்,

வனத்துறை சார்பில் ரூ.50 லட்சம் மதிப்பில் தடுப்பணை மற்றும் கால்வாய் அமைத்தல்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 1,100 மீ., 780 மீ., 400 மீ. நீளத்தில் குழாய் மற்றும் தரைப்பாலம் அமைத்தல்,

கடப்பரை ஆறு முதல் புளியானூர் ஏரி வரை ரூ.25 லட்சம் மதிப்பில் கால்வாய் மேம்படுத்தல் மற்றும் புதிய மாற்று கால்வாய் அமைத்தல்

என மொத்தம் 5 பணிகள் ரூ.98.010 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த திட்டம் நிறைவேறும் போது, புளியானூர் ஏரியின் நேரடி ஆயக்கட்டு பரப்பு 93 ஹெக்டேர் முழுமையாக பயன்பாட்டிற்கு வரும். மேலும் நார்சம்பட்டி, புரட குட்டை, மல்லிப்பட்டி, பாப்பன் ஏரி, பிள்ளையார் கோவில் குளம், ஆஞ்சநேயர் கோவில் குளம் உள்ளிட்ட பல ஏரிகள் மற்றும் குளங்கள் பயன் பெறும். நிலத்தடி நீர்மட்டம் உயரும், வேளாண் உற்பத்தி அதிகரிக்கும், குடிநீர் தேவையும் கால்நடைகளுக்கான நீர்வசதியும் மேம்படும்.

இந்த பணிகள் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. கவிதா, மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மரு.மாலதி, வட்டாட்சியர் திருமதி. ராஜலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாலாஜி, நீர்வடிப்பகுதி பொறியாளர் திரு.சரவணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# திமுக வெற்றிக்காக பாடுபடும் வசூல் ராஜாவாக மாறிவிட்டார் விஜய்: பாஜக விமர்சனம்

சென்னை, பிப்.06--

திமுகவின் வெற்றிக்காக பாடுபடும் வசூல் ராஜாவாக விஜய் மாறிவிட்டார் என தமிழக பாஜக விமர்சித்துள்ளது.

இதுகுறித்து பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக வெற்றி கழகத்தை வெற்றி வியாபார கழகமாக மாற்றி, ரசிகர்களையும், தொண்டர்களையும், கட்சியையும் அடமானம் வைத்து, திமுகவை வெற்றி பெற வைக்கும் வசூல் ராஜாவாக மாறிவிட்டார் நடிகர் விஜய்.

இந்நிலையில், தேர்தல் ஆலோசகராக செயல்படும் அனைத்துக் கட்சி அரசியல் வியாபாரி ஆதவ் அர்ஜுனா வீட்டில் விருந்து சாப்பிட்ட






விஜய்யை நினைத்து தவெக தொண்டர்கள் ரத்தம் கொதிக்கின்றனர். திமுக அரசை தட்டி கேட்டு, நடந்த தவறை சுட்டிக்காட்டி நியாயம் கேட்க வேண்டிய விஜய், ஆதவ் அர்ஜுனா இயக்கத்தில் டான்ஸ் ஆடுகிறார்.

அவரின் தேர்தல் வியாபார விருந்தில் தலையாட்டி பொம்மையாய் பங்கேற்கிறார். மக்கள் விரோத திமுக ஆட்சி தோற்றுவிடும், திமுக எனும் தீய சக்தி அழிந்துவிடும் என்பதை நன்கு உணர்ந்து, திமுக தலைவர் ஸ்டாலின் தன்னுடைய லாட்டரி பூத அடிமை ஆதவ் அர்ஜுனா மூலம் அரசியல் நடிகர் விஜய்யை பத்து பட சம்பளம் கொடுத்து விலை பேசி விட்டனர்.

2026 சட்டப்பேரவை தேர்தலில், திமுக, ஆதவ் அர்ஜுனாவிடம் போட்ட ஒப்பந்தப்படி திமுக வெற்றி பெற்றுவிடும் என்ற மகிழ்ச்சியை எலக்சன் பார்ட்டி விருந்தாக கொண்டாடி மகிழ்ந்தார் விஜய்.

மிஷனரி அரசியல் செய்யும் விஜய், சமூக நீதியை புறக்கணித்து, தமிழகத்துக்கு, தமிழக மக்களுக்கு, தமிழக வெற்றி கழக தொண்டர்களுக்கு செய்யும் துரோகத்தை வெற்றியாக கொண்டாடி, அரசியல் புரோக்கர் வீட்டில் விருந்து சாப்பிட்டதை வரலாறு மன்னிக்காது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# கீழக்கோட்டையில் தேசிய வானிலை ஆய்வாளர் தினம் கொண்டாடப்பட்டது

காளையார்கோவில், பிப்.06-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தேசிய வானிலை ஆய்வாளர் தினம் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு தலைமை ஆசிரியர் தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்து இத்தினத்தை குறித்து மாணவர்களுடன் உரையாற்றினார். 1744 ஆம் ஆண்டு இதே நாளில் பிறந்த ஜான் ஜெஃப்ரிஸின் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. விஞ்ஞானியும் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் ஜெஃப்ரி அமெரிக்காவின் முதல் வானிலை பார்வையாளர்களில் ஒருவராக கருதப்படுகிறார். அவர் 1774 முதல் 1816 வரை வானிலை பதிவுகளை வைத்திருந்த முன்னோடி எனவும் தேசிய வானிலை ஆய்வாளர்கள் தினத்தில் வானிலை முன்னறிவிப்பை அறிவது பல வழிகளில் நமக்கு மதிப்பு மிக்கது. வரவிருக்கும் நாட்களுக்கான நமது செயல்பாடுகளை திட்டமிடுவதற்கு நாம் அடிக்கடி வானிலை முன்னறிவிப்பை பார்க்கிறோம். அது நாம் என்ன செய்கிறோம். எப்படி உடை அணிகிறோம். எங்கு செல்கிறோம் அல்லது நாம் செல்கிறோமா இல்லையா என்பதை பாதிக்கிறது. வரவிருக்கும் புயல்கள் சூறாவளி அல்லது சூறாவளிகளுக்கு தயாராக இருப்பது உயிர்களை காப்பாற்றுகிறது. எனவே உங்கள் உள்ளூர் வானிலை நிபுணருக்கு நன்றி சொல்லுங்கள். சமீபத்திய புயல்கள் குறித்து உங்களுக்கு தெரிவிக்க நீங்கள் செய்திகளில் தொடர்பு கொள்ளும் நபராக இருக்கலாம் அல்லது தேசிய வானிலை சேவைக்கு அறிக்கை அளிக்கும் நிபுணர்களாகவும் இருக்கலாம். அவர்களின் எச்சரிக்கைகள் நம்மை மேலும் உடனடியாக ஆபத்துக்கள் குறித்து எச்சரிக்கின்றன. வானிலை மாற்றங்கள் பெரும்பாலும் நம் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கின்றன. எனவே அவர்களின் அர்ப்பணிப்பு மதிப்புமிக்கது. வானிலை அன்றாட வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் முடிந்தவரை துல்லியமான முன்னறிவிப்பை நீங்கள் எவ்வளவு பாராட்டுகிறீர்கள் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள். உங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் சிறப்பாக செயல்படும் வானிலை நிபுணருக்கு பாராட்டு தெரிவிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம் என்றார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பதனீர் சீசன் துவக்கம் - பதனீரை மதிப்பூட்டும் பொருளாக மாற்ற அரசு முன்வர வேண்டும்: பனைமரத் தொழிலாளிகள் கோரிக்கை

கிருஷ்ணகிரி, பிப்.06-

தமிழர்களின் அடையாளமாகவும், தமிழகத்தின் தேசிய மரமாகவும் விளங்கும் பனைமரங்களில் இருந்து பெறப்படும் பதனீர் சீசன், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் துவங்கியுள்ளது. மருத்துவ குணமுடைய இந்த பதனீரை மதிப்பூட்டும் பொருளாக மாற்றி, சுதந்திரமாக எடுத்து விற்பனை செய்ய உரிய அனுமதிகளை வழங்கி, பனைமரத் தொழிலாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த தமிழக அரசு முன்வர வேண்டும் என பனைமரத் தொழிலாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாததால், தமிழர்களின் பாரம்பரிய மரமாக விளங்கும் பனைமரங்கள், காலப்போக்கில் வெட்டப்பட்டு செங்கல் சூளைகளுக்கு இரையாகி வருகின்றன. இதனால், பனைமரங்களை நம்பி வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான பனைமரத் தொழிலாளிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது.

இருப்பினும், பனைமரங்களில் இருந்து பெறப்படும் பதனீர் மூலம்



பனை வெல்லம் உள்ளிட்ட இயற்கை உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு, உடல் ஆரோக்கியத்திற்காக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவ குணம் நிறைந்த இந்த பதனீர், வெயில்காலத்தில் மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெறுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை, மத்தூர், போச்சம்பள்ளி, சிங்காரப்பேட்டை, ஆம்பள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான பனைமரங்கள் உள்ளன. இம்மரங்களை நம்பி, ஏராளமான பனைமரத் தொழிலாளிகள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது பதனீர் சீசன் துவங்கியுள்ள நிலையில், பனைமரங்களில் இருந்து பதனீர் எடுக்கும் பணிகளில் தொழிலாளிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பனைமரங்களில் இருந்து எடுக்கப்படும் பதனீரை, சாலையோரங்களில் வைத்து லிட்டர் ரூ.100 என்ற விலையில் விற்பனை செய்து வருகின்றனர். சாலையில் செல்லும் பொதுமக்கள் மற்றும் கார்களில் நீண்ட தூரம் பயணம் மேற்கொள்வோர், இயற்கையாக கிடைக்கும் பதனீரை ஆர்வத்துடன் வாங்கி செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கிருஷ்ணகிரி ஸ்ரீ தர்மபுரி மாவட்ட பதனீர் மற்றும் பனைப்பொருட்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் சுப்பிரமணி கூறுகையில்,

"ஒருகாலத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம், குறிப்பாக ஊத்தங்கரை பகுதியில் அதிக அளவில் பனைமரங்கள் இருந்தன. ஆனால் காலப்போக்கில் பெரும்பாலான பனைமரங்கள் வெட்டப்பட்டு செங்கல் சூளைகளுக்கு அனுப்பப்பட்டதால், பனைமரத் தொழிலாளிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ள பனைமரங்களையாவது பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும், இன்றைய தலைமுறையினருக்கு பனைமரத்தின் பயன்பாடுகளை எடுத்துச் சொல்லும் நோக்கத்துடனும், பனைமரங்களை பாதுகாத்து வருகிறோம்" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "தற்போது பதனீர் எடுக்கும் சீசன் துவங்கியுள்ள நிலையில், மருத்துவ குணம் கொண்ட பதனீரை மதிப்பூட்டும் பொருளாக மாற்றி, ஏற்றுமதி செய்தால் பனைமரத் தொழிலாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். ஆனால் பதனீர் எடுக்க உரிய அனுமதி இருந்தும், காவல் துறையினரின் கெடுபிடியால் தொழில் செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே பதனீரை சுதந்திரமாக விற்பனை செய்ய அனுமதி வழங்க வேண்டும்" என்றார்.

மருத்துவ குணம் நிறைந்த பதனீரை மதிப்பூட்டும் பொருளாக மாற்றி, ஏற்றுமதி செய்வதன் மூலம் பனைமரத் தொழிலை மீட்டெடுக்கவும், 'கற்பக விருட்சம்' என போற்றப்படும் பனைமரங்களை அழிவில் இருந்து காக்கவும் தமிழக அரசு முன்வர வேண்டும் என பனைமரத் தொழிலாளிகள் வலியுறுத்தியுள்ளனர்.



■ ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சிறிய அளவிலான பால் பண்ணை திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் கொள்முதல் செய்திட விவசாய பயனாளிக்கு வங்கி கடனுதவியினை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர்/பொதுமேலாளர் திரு.மு.அமிர்தலிங்கம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.




# கொடிசியாவில் பில்டு இன்டெக் 2026 கண்காட்சி

கோவை பிப்.6-

கோவை மாவட்டம் கோவை கொடிசியா வளாகத்தில் பில்டு இன்டெக் 2026 கண்காட்சி தென்னிந்தியாவின் மாபெரும் கண்காட்சிகளில் ஒன்றாக கட்டிடக்கலை, கட்டுமானம், பொறியியல், கட்டுமான பொருட்கள் மற்றும் அதனை சார்ந்த துறைகளுக்கான கண்காட்சியாக திகழ்கிறது கட்டுமான துறை சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து அனைவரும் அறிய செய்வதை இக் கண்காட்சியின் நோக்கமாகும்.

பில்டு இன்டெக் 2026 (15 வது பதிப்பு) கண்காட்சியானது இந்த ஆண்டும் இந்தியாவின் முதன்மையான கட்டிடம் மற்றும் கட்டுமான கண்காட்சியாக நடைபெற உள்ளது. இந்த கண்காட்சியில் நவீன கட்டுமான பொருட்கள் சேவைகள் மற்றும் கட்டுமான இயந்திர தொழில்நுட்பங்கள் கட்டுமான முறைகள் மற்றும் கட்டுமான திட்டங்கள் குறித்து விவரங்கள் இடம் பெற உள்ளது. கட்டுமான துறை சார்ந்த விவரங்களை பகிர்ந்து கொள்வதற்கும் வணிக தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்கும் பில்டு இன்டெக் 2026 கண்காட்சி ஒரு மிகச்சிறந்த தளமாகும். அந்த வகையில் இந்த கண்காட்சியானது கட்டுமான தொழில் மற்றும் வணிகம் புரிவோர் தங்களுக்குள் தொடர்பு கொள்ளவும் வாடிக்கையாளர்கள் இந்த தொழில் சார்ந்தவரை தொடர்பு கொள்ளவும் இணையவும் ஒரு நிகழ்வாகும். இக்கண்காட்சி பிப்ரவரி 6ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெறுகிறது. ஒரு லட்சம் சதுர அடிகள் கொண்ட பிரம்மாண்ட இடத்தில் 250க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட அரங்குகள் உள்ளது. எனவே பில்டு இன்டெக் 2026 கண்காட்சியை அனைவரும் வந்து பார்க்க அழைக்கிறது கொடிசியா நிர்வாகம்.

# தென் மண்டல காவல் துறை: ஜனவரியில் 10 கொலை வழக்குகளில் அதிரடி தண்டனை

சிவகங்கை, பிப்.6-

தென் மண்டல காவல் துறையினரின் தீவிரப் புலனாய்வு மற்றும் தொடர் கண்காணிப்பு முயற்சியால், 2026 ஜனவரி மாதத்தில் மட்டும் கொலை, கொள்ளை மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகப் பல முக்கியத் தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன.

கொலை வழக்குகள் மற்றும் தண்டனை விவரம் ஜனவரி மாதத்தில் மட்டும் மொத்தம் 10 கொலை வழக்குகளில் நீதிமன்றங்கள் தண்டனை வழங்கியுள்ளன. இதில் தேனி மாவட்டத்தில் மட்டும் அதிகபட்சமாக 4 வழக்குகளில் தண்டனை கிடைத்துள்ளது.

குற்றவாளிகள் எண்ணிக்கை: மொத்தம் 20 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

ஆயுள் தண்டனை: 18 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

இரட்டை ஆயுள் தண்டனை: ஒரு குற்றவாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

மரண தண்டனை: இரண்டு வழக்குகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.





மாவட்ட வாரியாக முக்கியத் தீர்ப்புகள் மாவட்டம் வழக்கு விவரம் தண்டனை விவரம் தேனி மகனை கொலை செய்த பெற்றோர் (வீரபாண்டி காவல் நிலையம்) தாய் (A2) இரட்டை ஆயுள் தண்டனை; தந்தை (A1) ஆயுள் தண்டனை.

திண்டுக்கல் வடம்மதுரையில் சொத்துத் தகராறில் நடந்த கொலை 4 பேருக்கு ஆயுள் தண்டனை.

தேனி போடியில் முன்விரோதம் காரணமாகப் பகலில் நடந்த கொலை 3 பேருக்கு ஆயுள் தண்டனை.

சிவகங்கை இளம்பெண் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை (சக்கோட்டை) ஒருவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் 7 ஆண்டுகள் சிறை. தென்காசி செங்கோட்டையில் குடும்பத் தகராறில் நடந்த கொலை 5 பேருக்கு ஆயுள் தண்டனை.

ராமநாதபுரம் நிலத் தகராறில் பெரியப்பாவைக் கொலை செய்த வழக்கு ஒருவருக்கு ஆயுள் தண்டனை. கொள்ளை மற்றும் இதர குற்றங்கள்

கொள்ளை வழக்குகள்: திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 4 கொள்ளை வழக்குகளில் 8 பேருக்குத் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்: 22 போக்சோ (POCSO) வழக்குகள் உட்பட மொத்தம் 23 வழக்குகளில் 25 பேருக்குத் தண்டனை கிடைத்துள்ளது.

வீடு புகுந்து திருடுதல்: 3 முக்கிய வழக்குகளில் 12 குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது.

வழக்கு அலுவலர் திட்டம் (Case Officer Scheme) இந்தக் குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்கு தென் மண்டலத்தில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'வழக்கு அலுவலர் திட்டம்' முக்கியக் காரணமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் (SP) முக்கியமான வழக்குகளை அடையாளம் கண்டு, சாட்சிகளைச் சரியான நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதையும், அரசு வழக்கறிஞர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதையும் உறுதி செய்கின்றனர்.

முன்னாள் குற்றவாளிகள் மற்றும் சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் (History Sheeters) மீதான வழக்குகளைத் தீவிரமாகப் பின்தொடர்ந்து, அவர்களுக்குத் தகுந்த தண்டனை பெற்றுத் தருவதன் மூலம் குற்றங்கள் குறையும் என காவல் துறை தெரிவித்துள்ளது.




# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் புனித தோமையார்மலை வடக்கு ஒன்றியம் சார்பில் கழக செயல்வீரர்கள் கூட்டம் மூவரசம்பட்டில் நடைபெற்றது

சென்னை, பிப்.6-

சென்னை அடுத்த மூவரசம்பட்டில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் புனித தோமையார்மலை வடக்கு ஒன்றியம் சார்பில் கழக செயல்வீரர்கள் கூட்டம் கழக ஒன்றிய செயலாளரும், மூசரசம்பட்டு ஊராட்டிமன்ற தலைவருமான நி.ரி.ரவி என்ற விவேகானந்தன் தலைமையில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் தொகுதி சடமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் ஜெயக்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் வனஜா தயாளன், அனிதா இளங்கோவன், உஷாமாரிமுத்து, ஜனனி சுரேஷ்பாபு உட்பட மூவரசம்பட்டு ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் வருகின்ற தேர்தலில் கடினமான உழைத்து மக்களை நேரில் திமுக ஆட்சியில் கழக தலைவர் கொண்டுவந்த நலதிட்டங்களை எடுத்து கூறி மீண்டும் திமுக ஆட்சியை கொண்டு வந்து கழக தலைவரை இரண்டாவது முறையாக முதலமைச்சராக்க வேண்டும் எனவும் கட்சி பணிகளை வேகமாகவும், பொறுப்பாகவும் செய்ய வேண்டும் எனவும் பஜக கட்சி தனது கூட்டணியில் 100 கோடி ஊழல் செய்தவர்களுடன் கைகோர்த்து நின்று திமுக வை பார்த்து ஊழல் கட்சி என தெரிவிக்கின்றனர் என கூறினார். செயல் வீரர்கள் கூட்டத்தில் ஏராளமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இறுதியில் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அன்பு பிரபாகரன் நன்றி உரையாற்றினார்.



■ கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி D.M.I. பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 4 கல்லூரியில் பயிலும் 240 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினியினை வழங்கினார். தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வன் மற்றும திமுக நிர்வாகிகள் ரஹ்மான்,ஷேக் .சந்திரன் செல்வக்குமார்,.தாமோதரன்,.ராபின்சன்,கண்ணன்,தேவதாஸ்,ஜோசப் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கல்லல் துளிர் இல்லங்களில் புற்றுநோய் தினம் அனுசரிப்பு

சிவகங்கை, பிப்.6-


தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை மாவட்ட கல்லல் கிளை சார்பாக உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்பட்டது. டாக்டர் முத்துலட்சுமி, சர். சி. வி. ராமன், விக்ரம் சாராபாய் துளிர் இல்லங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகள் சுமார் 60 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முத்துலட்சுமி துளிர் இல்லப் பொறுப்பாளர் சித்திரைச் செல்வி தொடக்க உரையாற்றினார். விழாவில் கலந்து கொண்ட மாவட்ட செயலாளர் பிரபு புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்கள், வகைகள், சிகிச்சை முறை, தடுக்கும் முறைகள் ஆகியவற்றையும், உலக அளவில் புற்றுநோயின் தாக்கத்தையும் எடுத்துரைத்தார். அதுமட்டுமல்லாமல் கடந்த சில தினங்களுக்கு முன் கொண்டாடப்பட்ட உலக ஈர தினத்தின் முக்கியத்துவத்தையும்,




உயிரினங்களை சமநிலைப்படுத்துவதிலும், பல்லுயிர் பெருக்கத்திலும் ஈர நிலத்தின் அவசியத்தையும் மாணவர்களிடம் விளக்கினார். கிளைப் பொருளாளர் நாகரத்தினம் வாழ்த்துரை வழங்கினார். தனது கட்டுரை வெளியான உற்சாகம் நூலை பரிசாகப் பெற்றுக் கொண்ட கிளை செயற்குழு உறுப்பினர் பழனியப்பன் நன்றி தெரிவித்தார். துளிர் இல்ல செயலாளர் மற்றும் பொருளாளர் சரண்யா ரக் ஷினி நினைவு பரிசு வழங்கினர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், செலகாரம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய பல்நோக்கு சேவை மைய அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். தொடர்ந்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச. தினேஷ் குமார் இ.ஆ.ப., பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தே. மதியழகன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு. நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# விபத்துகளுக்குக் காரணமாகும் சுவரொட்டிகள்: காவல்துறை அதிரடி எச்சரிக்கை

விருதுநகர், பிப்06-

விருதுநகர் மாவட்டம், திரு.வேங்கடாசலபதி (T.V.) கலைக் கல்லூரி அருகே உள்ள நான்கு வழிச்சாலை மேம்பாலச் சுவர்களில், விதிகளை மீறி சுவரொட்டிகள் ஒட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கன்னியாகுமரி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் விருதுநகர் திரு.வேங்கடாசலபதி கலைக் கல்லூரி பகுதியில் அமைந்துள்ள மேம்பாலங்கள் மற்றும் அரசுச் சுவர்களில் விளம்பர பேனர்கள், சுவரொட்டிகள் மற்றும் நோட்டீஸ்கள் ஒட்டப்படுவது தொடர்கதையாகி வருகிறது.

காவல்துறையின் அறிவிப்பு இந்தச் சுவர்களில் சாதி, மதம், அரசியல் மற்றும் தனிநபர் தொடர்பான விளம்பரங்களைச் செய்ய காவல்துறை தரப்பில் முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பாலத்தின் சுவரிலேயே காவல்துறை சார்பில் விழிப்புணர்வுப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

விபத்து அபாயம் நெடுஞ்சாலையில் அதிவேகமாகச் செல்லும் வாகன ஓட்டிகள், சுவர்களில் ஒட்டப்பட்டுள்ள வண்ணமயமான விளம்பரங்களைக் கவனிக்கும்போது அவர்களின் கவனம் சிதறுகிறது. இதனால் எதிர்பாராத விதமாகப் பெரும் விபத்துகள் ஏற்படுவதாகக் காவல்துறை சுட்டிக்காட்டியுள்ளது.

"சுவர் விளம்பரங்களைப் பார்த்து வாகன ஓட்டிகள் கவனச்சிதறலுக்கு உள்ளாவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுக்கவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது." காவல்துறை அறிவிப்பு.

கடும் நடவடிக்கை உறுதி காவல்துறையின் இந்த எச்சரிக்கையை மீறியும், ஒருசிலர் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் போஸ்டர்களை ஒட்டி வருகின்றனர். இத்தகைய விதிமீறல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து, அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்பு விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட வாய்ப்புள்ளது.

# காரைக்குடியில் நாளை மின்தடை

சிவகங்கை, பிப்.6-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி துணைமின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் நாளை (பிப்07) காரைக்குடி கழனிவாசல்,பாண்டியன் நகர்,VAO காலனி,NGO காலனி,செக்காலைரோடு,சுப்பிரமணியபுரம்,வாட்டர்டேங்க், செஞ்சை,சூடாமணிபுரம்,முத்துப்பட்டினம்,காட்டுத்தலை வாசல்,வைரவபுரம்,பர்மாகாலணி ஆகிய பகுதிகளுக்கு காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை மின் விநியோகம் இருக்காது என காரைக்குடி மின் வாரிய செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

சிங்கம்புணரி மற்றும் அ.காளாப்பூர் துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது.

சிங்கம்புணரி நகர், கிருங்காகோட்டை, அணைக்கரைப்பட்டி, ஒடுவன்பட்டி, மேலப்பட்டி, கண்ணமங்கலப்பட்டி, கோட்டை வேங்கைப்பட்டி, செருதப்பட்டி, எஸ்.வி.மங்கலம், காளாப்பூர் பிரான்மலை, வேங்கைப்பட்டி, வையாபுரிப்பட்டி, செல்லியம்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் நாளை (பிப்07) காலை 10 மணி முதல் மாலை 5 வரை மின்விநியோகம் இருக்காது. என்று செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161